TNKR080009292023

**சார்பு நீதிமன்றம், குளித்தலை**
**முன்னிலை :– திரு.ஈ.முத்துசாமி, பி.ஏ., பி.எல்.,**

**சார்பு நீதிபதி, குளித்தலை**

**2026 ஆம் ஆண்டு ஜுன் திங்கள் 22–ம் நாள் திங்கட்கிழமை**

**அசல் வழக்கு எண்.366/2023**

**CNR NO.TNKR08-000929-2023**

தி சௌத் இந்தியன் பேங்க் லிமிடெட்,
காணியாளம்பட்டி கிளை சார்பாக
அதன் கிளை மேலாளர், ... வாதி

.... எதிர் .....

1. R.பாலாஜி
2. L.ராமச்சந்திரன்
3. R.பாப்பாத்தி

... பிரதிவாதிகள்

**தீர்ப்புரை**

வாதியின் வங்கியிடமிருந்து பிரதிவாதிகள் பெற்ற கடன் மற்றும் வட்டி தொகையான ரூ.3,03,242/–ஐ பின்வட்டியுடன் செலுத்த உத்தரவிடக் கோரி வாதி வங்கியால் வழக்கானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| வழக்கு தாக்கல் செய்யப்பட்ட நாள் | : | 08.08.2023 |
| இறுதி விசாரணை நடைபெற்ற நாள் | : | 19.06.2026 |
| தீர்ப்புரை பகரப்பட்ட நாள் | : | 22.06.2026 |
| வாதிக்காக | : | திரு.C.செல்வகுமார் – வழக்கறிஞர் |
| ஒன்று, மூன்று பிரதிவாதிகளுக்காக | : | திரு.K.சக்திவேல் – வழக்கறிஞர் ஆஜராகி, பின்னிட்டு எதிர்வழக்குரை தாக்கல் செய்யாததால் ஒன்று, மூன்று பிரதிவாதிகள் தோன்றா தரப்பினர்களாக கருதப்பட்டுள்ளார்கள். |

இரண்டாவது பிரதிவாதி : Steps எடுக்கப்படாததால் இரண்டாவது பிரதிவாதிக்கு எதிராக வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

1) **பிராதின் சுருக்கம் :–**

வாதியின் வங்கியிடம் பிரதிவாதிகள் கல்வி கடன் கேட்டு கடந்த 10.02.2009–ம் தேதி அன்று விண்ணப்பம் கொடுக்க, மேற்படி பிரதிவாதிகளின் ஆவணங்களை பரிசீலனை செய்து, பிரதிவாதிகளுக்கு கடந்த 09.05.2009–ம் தேதி அன்று ரூ.80,000/–ம் கடனாக கொடுக்க, பிரதிவாதிகள் மேற்படி கடன் தொகையினை பெற்றுக்கொண்டு, வாதியின் வங்கிக்கு ஆவணங்கள் பிறப்பித்துக்கொடுத்துள்ளார்கள். பின்னிட்டு, பிரதிவாதிகள் மேற்படி கடன் தொகையை திரும்ப செலுத்தவில்லை. அதனால், வாதியின் வங்கியானது வழக்கறிஞர் மூலம் கடந்த 06.06.2023–ம் தேதி அன்று பிரதிவாதிகளுக்கு அறிவிப்பு ஒன்றை அனுப்ப, மேற்படி அறிவிப்பினை ஒன்று, மூன்று பிரதிவாதிகள் பெற்றுக்கொண்டுள்ளார்கள். இரண்டாவது பிரதிவாதி பெற்றுக்கொள்ளாமல் அறிவிப்பு திருப்பப்பட்டுள்ளது. எனவே, வாதியின் வங்கியிடம் இருந்து பிரதிவாதிகள் பெற்ற கடன் மற்றும் வட்டி தொகையான ரூ.3,03,242/–ஐ பின்வட்டியுடன் செலுத்த உத்தரவிடக்கோரி இவ்வழக்கானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) பிரதிவாதிகளை நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜரில்லை என்பதால் தோன்றா தரப்பினராக கருதப்பட்டுள்ளார்.

3) வாதி வங்கி தரப்பில், வங்கியின் கிளை மேலாளர் பெருமாள் என்பவர் வா.சா.1 ஆக விசாரணை செய்யப்பட்டு, வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.13 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

4) வாதி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் அவருடைய வாதுரையில், வாதி அவரது வழக்கினை தகுந்த சாட்சி மற்றும் சான்றாவணங்கள் வாயிலாக நிரூபித்துள்ளதால், வாதி வங்கி கோரியுள்ள பரிகாரம் வாதி வங்கிக்கு கிடைக்கத்தக்கது என வாதிட்டார்.

5) **தீர்வு :–**

**5 (1)** வா.சா.1 அவரது முதல் விசாரணையில், வாதியின் வங்கியிடம் பிரதிவாதிகள் கல்வி கடன் கேட்டு கடந்த 10.02.2009–ம் தேதி அன்று விண்ணப்பம் கொடுக்க, மேற்படி பிரதிவாதிகளின் ஆவணங்களை பரிசீலனை செய்து, பிரதிவாதிகளுக்கு கடந்த 09.05.2009–ம் தேதி அன்று ரூ.80,000/–ம் கடனாக கொடுக்க, பிரதிவாதிகள் மேற்படி கடன் தொகையினை பெற்றுக்கொண்டு, வாதியின் வங்கிக்கு ஆவணங்கள் பிறப்பித்துக்கொடுத்துள்ளார்கள் என்றும், பின்னிட்டு, பிரதிவாதிகள் மேற்படி கடன் தொகையை திரும்ப செலுத்தவில்லை என்றும், அதனால், வாதியின் வங்கியானது வழக்கறிஞர் மூலம் கடந்த 06.06.2023–ம் தேதி அன்று பிரதிவாதிகளுக்கு அறிவிப்பு ஒன்றை அனுப்ப, மேற்படி அறிவிப்பினை ஒன்று, மூன்று பிரதிவாதிகள் பெற்றுக்கொண்டுள்ளார்கள் என்றும், இரண்டாவது பிரதிவாதி பெற்றுக்கொள்ளாமல் அறிவிப்பு திருப்பப்பட்டுள்ளது என்றும், எனவே, வாதியின் வங்கியிடம் இருந்து பிரதிவாதிகள் பெற்ற கடன் மற்றும் வட்டி தொகையான ரூ.3,03,242/–ஐ பின்வட்டியுடன் செலுத்த உத்தரவிடக்கோரி இவ்வழக்கானது தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக கூறியுள்ளார்.

**5 (2)** வாதியின் வங்கியிடம் பிரதிவாதிகள் ரூ.80,000/– கடன் வாங்கியுள்ளார் என்கிற சங்கதியையும், அதற்காக பிரதிவாதிகள் ஆவணங்கள் பிறப்பித்துக்கொடுத்துள்ளார் என்கிற சங்கதியையும் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.13 வரையிலான ஆவணங்கள் வாயிலாக அறிந்து கொள்ள முடிகிறது. பிரதிவாதிகள் நீதிமன்றத்தில் ஆஜர் ஆகாதது அவர்களுக்கு எதிரான அனுமானத்தை உருவாக்குகிறது. வாதியின் வங்கியிடம் பிரதிவாதிகள் கடன் பெற்றுக்கொண்டு, ஆவணங்கள் பிறப்பித்துக் கொடுத்துள்ளார்கள் என்கிற சங்கதியையும், மேற்படி கடன் தொகையினை பிரதிவாதிகள் திரும்ப செலுத்தவில்லை என்கின்ற சங்கதியையும் வா.சா.1–ன் வாய்மொழி சாட்சியத்தின் வாயிலாகவும், வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.13 வரையிலான ஆவணங்களின் வாயிலாகவும் வாதி நிரூபணம் செய்துள்ளதால், வாதி கோரிய பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கது என முடிவு செய்யப்படுகிறது.

6) **முடிவாக,**

**(அ)** வாதியின் வழக்கானது செலவுத் தொகையுடன் அனுமதிக்கப்படுகிறது.

**(ஆ)** பிரதிவாதிகள், வாதியின் வங்கிக்கு செலுத்த வேண்டிய தாவா தொகை ரூ.3,03,242/-ம் மற்றும் அசல் கடன் தொகை ரூ.80,000/-க்கு தாவா தேதி முதல் தீர்ப்பு தேதி வரை 9% வருட வட்டியும், தீர்ப்பு தேதி முதல் தொகை வசூலாகும் காலம் வரையிலான காலத்திற்கு 6% வருட வட்டியும் இரண்டு மாதத்திற்குள் செலுத்த வேண்டும் என்று தீர்ப்பளிக்கப்படுகிறது.

இத்தீர்ப்புரை, என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2026-ம் ஆண்டு ஜுன் மாதம் 22-ஆம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

MUTHUSAMY ESWARAN

Digitally signed by MUTHUSAMY ESWARAN
Date: 2026.06.22 17:51:22 +0530

சார்பு நீதிபதி,
குளித்தலை.

**வாதி தரப்பு சாட்சி :-**

வா.சா.1 – பெருமாள் (வாதி வங்கியின் கிளை மேலாளர்)

**வாதி தரப்பு சான்றாவணங்கள் :-**

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.1 | 09.05.2009 | கடன் அனுமதி கடிதம் – அசல் |
| வா.சா.ஆ.2 | 09.05.2009 | கல்வி கடன் கொதுவை ஒப்பந்தம் – அசல் |
| வா.சா.ஆ.3 | 09.05.2009 | 2, 3 பிரதிவாதிகள் எழுதிக்கொடுத்த பொறுப்பு ஒப்புதல் கடிதம் – அசல் |
| வா.சா.ஆ.4 | 09.05.2009 | ஒப்புதல் கடிதம் – அசல் |
| வா.சா.ஆ.5 | 08.05.2012 | கடன் உயிர்பிப்பு கடிதம் – அசல் |
| வா.சா.ஆ.6 | 03.12.2014 | கடன் உயிர்பிப்பு கடிதம் – அசல் |
| வா.சா.ஆ.7 | 17.10.2017 | கடன் உயிர்பிப்பு கடிதம் – அசல் |
| வா.சா.ஆ.8 | 10.08.2020 | கடன் உயிர்பிப்பு கடிதம் – அசல் |
| வா.சா.ஆ.9 | 06.06.2023 | வழக்கறிஞர் அறிவிப்பு – அலுவலக நகல் |
| வா.சா.ஆ.10 | | அஞ்சலக ஒப்புதல் அட்டை – அசல் |
| வா.சா.ஆ.11 | | திருப்பப்பட்ட அஞ்சல் உறை – அசல் |

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.12 | | அஞ்சலக ஒப்புதல் அட்டை – அசல் |
| வா.சா.ஆ.13 | | கடன் கணக்கு விபரம் – சான்றிட்ட நகல் |

**பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள் :–** இல்லை
**பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணங்கள் :–** இல்லை

MUTHUSAMY ESWARAN

Digitally signed by MUTHUSAMY ESWARAN
Date: 2026.06.22 17:34:26 +0530

சார்பு நீதிபதி,
குளித்தலை.